# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 58/2013

| | |
|---|---|
| Deposition of witness for | : PW1 |
| Name | : பிரேமலதா |
| Father's / Husband Name | : முருகன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 21st day of October 2024.

**முதல் விசாரணை:–**

நான் கிழக்கு தெரு 8, ஜான்சன் பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுகுடித்தனமாக உள்ளேன். இறந்துபோன செந்தில்வேல் எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.01.2011ம் தேதி சனிக்கிழமை இரவு எனது வீட்டிற்கு கரிகாலன், பாலகிருஷ்ணன், பிரதாப், சிக்கந்தர் ஆகியோர் வந்தார்கள். அவர்கள் உன் தம்பி பிரச்சனை செய்து கொண்டிருக்கிறான். அவனை ஒழுங்காக இருக்க சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னோம் வந்தவர்கள் சென்றுவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து என் தம்பி வீட்டிற்கு வந்தார். அப்போது சிக்கந்தர், என்

தம்பி செந்தில்வேலுக்கு போன் செய்தார். அவர் கெட்ட வார்த்தை பேசுவதாக என் அம்மாவிடம், என் தம்பி சொன்னார். திரும்ப திரும்ப போன் செய்து கெட்ட வார்த்தை பேசுவதால் நான் போய் என்னவென்று பார்த்துவிட்டு வருகிறேன் என்று என் தம்பி சொன்னார். என் தம்பி மேற்கு விநாயகர் கோவில் தெரு, உழவர் சந்தை பின்புறம் உள்ள பொது கழிப்பறைக்கு சென்றார். நானும், அவருக்கு பின்பாக சென்றேன். என் தம்பி பஜாஜ் காலிபர் வண்டியை ஓட்டி சென்றார். அங்கு இரண்டு கார்கள் இருந்தது. ஒரு கார் இண்டிகா கார். பதிவு எண். 9563. மற்றொரு புளூ கலர் கார் பதிவு எண். 4027 அங்கு நின்றுகொண்டிருந்தது. இண்டிகா காரில் இருந்து நெட்ட கார்த்தி, கரிகாலன், பிரதாப், பாலு, சிக்கந்தர் ஆகிய நான்கு பேரும் தற்போது சாட்சி 6 பேர் என்று சொல்கிறார். கரிகாலன், சிக்கந்தர், நெட்ட கார்த்தி, எலும்ப கார்த்தி, பிரதாப், ஆகியோர் வீச்சறிவாளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். பாலகிருஷ்ணன் நீயெல்லாம் ஒரு ஆளா, சித்தேஷ் கூட சேர்ந்து கொண்டு எங்களை ஒழித்துக் கட்ட பார்க்கிறாயா என்று ஒழிந்து போ என்று என் தம்பி செந்தில்வேலை முதுகில் வெட்டினார். சுற்றி நின்ற கரிகாலன், பிரதாப், நெட்ட கார்த்தி, எலும்ப கார்த்தி, சிக்கந்தர் ஆகியோர் என் தம்பியின் வலது கன்னம் மற்றும் வலது நெற்றியில் அடித்தார்கள். மீதியிருந்த பல்சர் சந்துரு, ராதாகிருஷ்ணன், மணி, முரளி ஆகியோர்கள் புளூ கலர் காரில் இருந்த வீச்சறிவாளுடன் வந்தார்கள். அவர்கள் என் தம்பின் இடது கன்னத்தில் வெட்டிவிட்டார்கள். ராதாகிருஷ்ணன் என்னை தாடை மீது உருட்டு கட்டையால் அடித்துவிட்டார். என் தம்பி கீழே விழுந்து கிடந்தவரை காலை பிடித்து கழிப்பறைக்கு வெளியில் இழுத்து வந்து சிக்கந்தர், பாலகிருஷ்ணனும் வெளியே கொண்டு வந்துவிட்டார்கள். போகும் போது எதிரிகள் எங்களை பகைத்துக் கொண்டால் அனைவருக்கும் இதே நிலை தான் என்று மிரட்டி விட்டு இட்டேரி ரோட்டு

தெற்கு பக்கம் சென்றுவிட்டார்கள். என்னை என் மாமனார் வீரப்பன் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன். போலிசார் எழுதினார்கள். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் என்னுடைய கையெழுத்து உள்ளது. அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ–P1** ஆகும். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் சொல்ல சொல்ல போலிசார் தான் எழுதினார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் டிகிரி படித்துள்ளேன். எதிரிகள் அனைவரும் எனது வீட்டை சுற்றி வசிப்பவர்கள் என்று சொன்னால் இல்லை. எங்க வீட்டை சுற்றி புழங்கி கொண்டிருப்பவர்கள். எனது தம்பி செந்தில்வேல் மீது அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் வழக்குகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். வீரப்பன் என்பது என் மாமனார். என் மாமனார் வீரப்பன் பிஎஸ்என்எல் டெலிபோனில் எஸ்.ஐ ஆக பணிபுரிந்துவிட்டு ஓய்வு பெற்றுவிட்டார். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு போலிசார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஜான்சன்பேட் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்த இடம் மேற்கு விநாயகர் தெரு. எங்கள் வீடு ஜான்சன் பேட்டையில் உள்ளது. ஜான்சன்பேட்டையில் இருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு கோர்ட் ரோடு வந்து அதிலிருந்து இடதுபுறம் திரும்பு இட்டேரி ரோடு வந்து, அங்கிருந்து வலதுபுறம் திரும்பினால் தான் சம்பவம் நடந்த தெரு வரும் என்று சொன்னால் சரிதான். மேற்கு விநாயகர் தெரு என்பது குறுகலானது என்று சொன்னால் ஆமாம். ஆனால் கார் நிற்கும். உழவர் சந்தையிலிருந்து பின்வாசல் வழியாக சம்பவ இடத்திற்கு வரலாம் என்று சொன்னால் சரிதான்.

கழிவறை பின்புறம் அடுத்த காம்பவுண்டில் ஐஸ்வர்யா மருத்துவமனை உள்ளது என்று சொன்னால் சரிதான் மேற்படி ஐஸ்வர்யா மருத்துவமனை இரண்டு மாடி கட்டிடம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு தெற்குபுறம் பிரட் மொத்தமாக தயார் செய்யும் இடம் உள்ளது என்று சொன்னால் ஆமாம். இட்டேரி ரோட்டிற்கு தெற்குபக்கம் ஒரு 100 அடி தூரத்தில் தண்ணீர் பிடிக்கும் டேங் உள்ளது என்று சொன்னால் அது அப்போது இருந்தது. தற்போது உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் நேற்று மாலை 4.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு அருகில் சென்றேன் என்று சொன்னால் இல்லை. சம்பவ இடத்திற்கு இடதுபுறம், எதிர்புறம் வழக்கறிஞர் வீடு உள்ளது என்று சொன்னால் நான் பார்க்கவில்லை. வழக்கறிஞர் இளங்கோ வீடு அங்கு உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. கன்னங்குறிச்சி மெயின் ரோட்டில் இருந்து இடதுபுறம் திரும்பினாலும் மேற்கு விநாயகர் கோவில் தெரு வரும் என்று சொன்னால் ஆமாம். அந்த வழியாகவும் என் வீட்டிற்கு செல்லலாம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு எதிர்புறம் 2 மாடி கட்டிடம் உள்ளது என்று சொன்னால் அது எனக்கு நியாபகம் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் யார் யார் எல்லாம் அங்கு இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தெருவில் இருந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அதனால் தெருவில் இருந்தவர்கள் யார் பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அங்கு கூட்டமே இல்லை. சம்பவ இடத்தில் இருந்து என் மாமனார் என்னை ஆட்டோவில் அழைத்து சென்றார். என் மாமனார் எனது வீட்டிற்கு அருகில் தான் வசிக்கிறார். இந்த வழக்கின் சாட்சி பாப்பாத்தி என் அம்மா என்று சொன்னால் சரிதான். சாட்சி ரேவதி இறந்தவரின் மனைவி என்று சொன்னால் சரிதான். 2/23 என்ற கதவு எண் என் அம்மாவின் வீடு. என் அம்மாவிற்கு வயது சம்பவ சமயத்தில் 62 என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். சம்பவம்

நடந்த தெருவில் ஒரு கோவில் உள்ளது. சம்பவ சமயத்தை தவிர அந்த தெருவிற்கு நான் செல்வதில்லை. சம்பவம் நடந்த பின்பு நான் சம்பவம் நடந்த தெருவிற்கு சென்றதில்லை. நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று வந்தவர்களிடம் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சம்பவ இடத்தில் நான் மயக்கம் அடையவில்லை, தெளிவாக தான் இருந்தேன். நான் மருத்துவமனைக்கு சென்ற போது நேரம் சுமார் 9.00 லிருந்து 9.30 க்குள் இருக்கும். இடைப்பட்ட காலத்தில் காவல் துறைக்கு தகவல் தெரிந்ததா இல்லையா என்று எனக்கு தெரியாது. இடைப்பட்ட காலத்தில் என் தாயாரோ பக்கத்தில் இருந்த வேறு நபர்களோ காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது போலிசார் என்னை அரிவாள்களை காண்பித்து விசாரணை செய்யவில்லை. நானும் போலிசாரிடம் அரிவாள்களின் அடையாளத்தை சொல்லவில்லை. என் தம்பி புளு கலர் சட்டை சம்பவத்தின் போது அணிந்திருந்தார். சம்பவ இடத்திற்கு அருகில் என் முன்பு நேற்று இன்னோவா கார் ஒன்று திரும்பியது என்று சொன்னால் நான் நேற்று சம்பவ இடம் செல்லவில்லை. நான் இன்று நீதிமன்றத்திற்கு ஆட்டோவில் வந்தேன். அந்த ஆட்டோவின் பதிவு எண் எனக்கு தெரியாது. அதை நான் பார்க்கவில்லை. என் தம்பியின் போன் நெம்பர் எனக்கு நியாபகம் இல்லை. சம்பவ சமயத்தில் என் தம்பி பவானியில் ஒரு மெக்கானிக் கடை வைத்திருந்தார். பவானி சம்பவ இடத்தில் இருந்து சுமார் 50 – 60 கி.மீ இருக்கும் என்று சொன்னால் இருக்கலாம். 1–3/4 மணி நேரம் பயணம் செய்தால் பவானி செல்லலாம். புகார் வாக்குமூலத்தின் அனைத்து பக்கங்களிலும் நான் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அடித்தல் திருத்தல்கள் இருந்ததா என்றால் அது எனக்கு

நியாபகம் இல்லை. என் தாயார் மற்றும் இறந்தவரின் மனைவி மற்றும் என் மாமனாரை போலிசார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் மாமனார் வீரப்பன் காவல் நிலையம் செல்லவில்லை. மருத்துவமனையில் என்னை காலை 9.50 மணிக்கு என்னை மருத்துவர் விசாரித்த போது எனக்கு பல் வலி மற்றும் கன்னம் வலி என்று சொன்னேன். நான் சொன்ன விவரத்தை மருத்துவர் எழுதி கொண்டார் என்று சொன்னால் ஆமாம். தாடை வலி என்று சொன்னேன். நான் மருத்துவரிடம் சொன்ன விவரம் பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் தம்பியை போனில் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்பதை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளேன். கழிவறை ஒரு காம்பவுண்டிற்குள் உள்ளது என்று சொன்னால் சரிதான். காம்பவுண்டிற்குள் என்ன நடந்தாலும், ரோட்டில் இருந்து பார்த்தால் தெரியாது என்று சொன்னால் கழிவறைக்குள் நடப்பது தெரியாது, ஆனால் காம்பவுண்டிற்குள் நடப்பது தெரியும். காம்பவுண்ட் முடிந்தவுடன் 20 அடி தூரம் மண் தரை உள்ளது என்று சொன்னால் இல்லை. காம்பவுண்டை ஒட்டி ரோடு உள்ளது. காம்பவுண்டடை ஒட்டி 20 அடி மண் தரை உள்ளது, அதுக்கு அடுத்தாற்போல் கழிவுநீர் கால்வாய் உள்ளது என்றும், அதுக்கு அடுத்தாற்போல் தான் ரோடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ரோட்டில் இருந்து கழிவறைக்குள் நடப்பதை நான் பார்க்க முடியாது என்று சொன்னால் சரிதான். ஆனால் ரோட்டில் இருந்து காம்பவுண்டிற்குள் நடப்பதை பார்க்கலாம். மேற்கு பிள்ளையார் கோவில் தெருவின் கிழக்கு பக்கம் சிறிது தூரத்தில் வட்டாட்சியர் அலுவலகம், பஸ் டிப்போ மற்றும் காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து இடதுபக்கம் 2 கி.மீ தூரத்தில் அரசு மருத்துவமனை உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த உடன்

எனக்கு ஐஸ்வர்யா மருத்தவனைக்கு செல்லவேண்டும் என்றோ, காவல் நிலையம் செல்ல வேண்டும் என்றோ தோன்றவில்லை என்று சொன்னால் சரிதான். என் தம்பியின் பிரேதம் எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் கிடந்தது என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் சொல்லாமல் நான் மருத்துவமனையில் இருந்து வந்துவிட்டேன் என்று சொன்னால் மருத்துவரின் அறிவுரையின் பேரில் தான் வீட்டிற்கு வந்தேன். மருத்துவர் டிஸ்சார்ஸ் செய்த பின்பு தான் நோட்டுடன் வெளியில் வந்து சிகிச்சை பெற்றேன். மருத்துவமனையில் நோட்டை கொடுத்தார்கள் என்று நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த நோட்டை நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. அந்த நோட்டு எனது சிகிச்சைக்கு தேவைப்பட்டதால் நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. ஜெயராமன், த/பெ. தாண்டவன், பொன்னுசாமி, த/பெ. வீரப்பன், சேகர், த/பெ. தங்கவேல், ஜெயக்குமார், த/பெ. ராமு, முருகேசன், த/பெ. அய்யாசாமி ஆகியோரை தெரியுமா என்றால் எனக்கு தெரிந்த நபர்கள் அந்த பெயரில் உள்ளார்கள். அவர்கள் தான் நீங்கள் சொல்லும் நபர்களா என்று எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்த முருகேசன் பெயிண்ட் அடிக்கும் வேலை செய்கிறார். அவரை இந்த வழக்கில் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. ஜெயராமன் என்பவர் ஏடிசியில் வேலை பார்த்தார். அவரை இந்த வழக்கில் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது அம்மா இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். நான் அவரிடம் பேசிவிட்டு தான் வந்தேன். நான் சாட்சியம் அளிக்கப் போகிறேன் என்று என் தாயாருக்கு தெரியும். இந்த வழக்கில் தயார் செய்த முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் முதல் இரண்டு பக்கங்களில் உள்ள தாள்களில் தான் எதிரிகள் அனைவரின் பெயரும் உள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என்ன

விவரங்கள் எழுதியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன விவரம் தான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னை விசாரித்த மருத்துவர் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவர் மனோகர் என்று சொன்னால் சரிதான். தற்போது சாட்சி மருத்துவர் பெயர் தெரியவில்லை என்று சொல்கிறார். மருத்துவர் என்னை கேட்ட போது என்னை அடையாளம் தெரியாத 12 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. அடையாளம் தெரியும். எதிரிகளுடன் சேர்ந்து என் தம்பிக்கு ஒரு வழக்கு இருந்தது என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு பரிட்சியமான நபர்கள் என்று சொன்னால் ஆமாம். எதிரிகளின் பெயர்களும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காயம் எண். 23, கிழக்கு தெரு 8 , ஜான்சன்பேட்டை, சேலத்தில் வைத்து தான் காயம்பட்டதாக மருத்துவரிடம் சொல்லியுள்னே் என்று சொன்னால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் முதல் இரண்டு பக்கங்களிலும் எனது கையெழுத்து இல்லாததற்கு காரணம் நான் போலிசாரிடம் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த பக்கங்களை மாற்றியுள்ளதால் தான் என்று சொன்னால் சரியல்ல. ஏற்காட்டில் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் சம்மந்தமாக ஒரு பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இடம் சம்மந்தமாக ஒரு வழக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தம்பி மீது பல குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். என் தம்பி கொள்ளை, கொலை வழக்குகளில் ஈடுபட்டிருந்ததால் அவருக்கு பல்வேறு எதிரிகள் இருந்தர்கள் என்றும் அவர்களால் இந்த சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி மீது கொலை வழக்கு

இல்லை. கொள்ளை வழக்கு மட்டும் தான் இருந்தது. என் தம்பி கொள்ளை வழக்கில் ஈடுபட்டிருந்தார் என்றும், அந்த கொள்ளை பொருட்களை பங்கு பிரிப்பதில் வேறு நபர்களால் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. கொள்ளை வழக்கில் என் தம்பி பெயர் இல்லை. கைபேசியில் அழைப்பு வந்தததால் தான் என் தம்பி வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு சென்றார் என்று நான் சொல்கிறேன். என் தம்பியின் செல்போனை பார்த்தால் அவருக்கு யாரிடம் இருந்து கடைசியாக அழைப்பு வந்தது என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் ஆமாம். அந்த செல்போனை பார்த்தால் நான் சொல்வது சரியா, பொய்யா என்று தெரிய வரும் என்று சொன்னால் ஆமாம். இந்த நீதிமன்றத்திற்கு நான் இதற்கு முன்பு நான்கு முறை வந்துள்ளேன். இன்று வந்தது போல் தான் அன்றும் வந்தேன். இன்று வந்ததை போல் தான் வண்டி எண்ணையும், பெயர்களையும் அன்றும் நியாபகப்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் சரிதான். தெரிந்ததை சொன்னேன். என்னை போலிசார் ஒரு முறை தான் விசாரித்தார்கள். ஒரு முறை விசாரித்த போது தான் ஒரு கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். என் தம்பி விநாயகர் கோவில் தெருவில் யாராலே வெட்டுபட்டுக் கிடப்பதாக தகவல் தெரிந்து, பதற்றத்தில் வீட்டில் இருந்து கிளம்பி போகும் போது எனக்கு தவறி விழுந்ததில் கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வண்டிகளின் பதிவு எண்கள் முழுமையான எண்கள் எனக்கு நியபாகம் இல்லை. போலிசார் சொல்லி கொடுத்து தான் வண்டி எண்களை நான் இந்த நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>7,11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

7,11 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை

ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டது.

**<u>2 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ சமயத்தில் நான் குடியிருந்த இடத்திற்கும், எனது தம்பியும் அம்மாவும் குடியிருந்து வீட்டிற்கும் 80 அடி தூரம் இருக்கும். சம்பவ சமயத்தில் நான் குடியிருந்த வீட்டின் கதவு எண். 57, மேற்கு தெரு. நான் புகார் வாக்குமூலம் கொடுத்த போதோ, போலிசார் என்னை விசாரித்த போதும், நான் குடியிருப்பது கதவு எண். 23, கிழக்கு தெரு என்று சொன்னேன் என்று சொன்னால் சரிதான். மருத்துவமனையிலும், போலிசார் என்னை விசாரித்த போதும் நான் குடியிருக்கும் விவரத்தை தவறாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அந்த சமயத்தில் நான் 3 மாதம் எங்கள் அம்மா வீட்டில் இருந்தேன். நான் எப்போதும், அனைவரிடமும் கொடுக்கும் விலாசத்தை தான் போலிசாரிடம் கொடுத்தேன். எனக்கு 2004 ல் திருமணம் நடைபெற்றது. 2004 முதல் 2011 வரை கதவு எண். 57 ல் தான் குடியிருந்தேன் என்று சொன்னால் ஆமாம். 2005 முதல் அங்கு குடியிருந்தேன். திருமணம் ஆன பின்பு என் பெயரில் நான் ஆதார் கார்டு, ரேசன் கார்டு மாற்றவில்லை. நான் என் அம்மா வீட்டிற்கு சம்பவம் நடந்ததாக சொன்ன தேதியில் மாலை 7.00 மணிக்கு சென்றேன். நான் அம்மா வீட்டிற்கு சென்றபோது அங்கு என் தம்பி செந்தில்வேல் இல்லை. நான்கு, ஐந்து பேர் வந்து சென்ற விவரத்தை, என் தம்பி வந்தவுடன், நான் அவரிடம் சொல்லவில்லை. என் அம்மா வீட்டிற்கு வந்து செந்தில்வேல் சுமார் 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் இருந்தார். என் தம்பி வைத்துள்ள செல்போன் பற்றிய விவரத்தை நான் புகார் வாக்குமூலத்திலும், புலன் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் போன் வைத்திருந்ததாக சொன்னேன். விவரம் எதையும் சொல்லவில்லை. என் தம்பி வைத்திருந்த போனை நான் பார்த்துள்ளேன். என் தம்பி வைத்திருந்த செல்போனை காண்பித்து போலிசார்

என்னை எப்போதாவது விசாரித்தார்களா என்றால் இல்லை. என் தம்பி சென்றவுடன் நான் அவர் பின்பு நான் சென்றதாக புகார் வாக்குமூலத்திலும் புலன் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் தெரு தென்வடலாக உள்ளது என்று சொன்னால் ஆமாம். தெரு தற்போதும் அதே போல் தான் உள்ளது. மாற்றம் எதுவும் இல்லை. அந்த தெருவில் ஒரு வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததால் மற்றொரு வாகனம் செல்லமுடியாது என்று சொன்னால் பிரியாக போகமுடியாது. அட்ஜெஸ்ட் செய்து போகலாம். அந்த தெருவின் கிழமேல் அகலம் சுமார் 20 அடி இருக்கலாம். தற்போது சாட்சி சுமார் 15 அடி இருக்கலாம் என்ற சொல்கிறார். என் தம்பியை தாக்கியவர்கள் அங்கிருந்து இட்டேரிக்கு ஓடிவிட்டதாக நான் சொல்கிறேன். எதிரிகள் ஓடிச் சென்ற பின்பு என் மாமனார் என்னை வந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சுமார் 10 நிமிடம் ஆனாது. அந்த 10 நிமிடத்தில் நான் என் தம்பியை போய் தொட்டு பார்க்கவில்லை. சம்பவம் நடந்த தெரு மக்கள் வசிக்கின்ற, கடைகள் இருக்கின்ற நெரிசலான பகுதி என்று சொன்னால் சரிதான். என் மாமனார் எங்களுடன் வசிக்கவில்லை. அவர் தனியாக வசிக்கிறார். என் மாமனார் வீரப்பன், யார் தகவல் சொல்லி, எப்படி வந்தார் என்று எனக்கு தெரியாது. மருத்துவர் என்னை பார்த்தபோது நான் அவரிடம் சுயநினைவுடன் எனக்கு என்ன காயம் என்று சொன்னேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தேன். அந்த பெட் எண் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் என்னிடம் வந்து வாக்குமூலத்தை பதிவு செய்ததாக நான் சொல்லும் காவலர் சீருடையில் தான் வந்தார். நான் வந்த காவலரிடம் நான் எழுத்து மூலம் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் கொடுத்த வாக்குமூலத்தில் யார் பெயரையாவது சொல்லாமல் உள்ளேனா என்றால்

இல்லை. புகார் வாக்குமூலத்தில் உருட்டுக்கட்டையுன் மற்றும் சிலர் பொது கழிப்பறை பக்கம் போனார்கள் என்று சொல்லியுள்ளேன். மற்றும் சிலர் என்று நான் சொல்கிறவர்கள் யார் என்று எனக்கு தெரியும். அவர்கள் மொத்தம் 6 பேர். அந்த 6 நபர்களை பற்றி போலிசார் விசாரித்தபோது உருவ அமைப்பு, அங்க அடையாளங்களை சொன்னேன். மருத்துவனையில் சேர்ந்த பின்பு நான் மருத்துவரிடம் சொல்லாமல் நான் மருத்துவமனையில் இருந்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை லதா என்று அழைப்பார்கள். என் கணவர் பெயர் முருகன். மருத்துவரிடம் நான் அடையாளம் தெரியாத 12 நபர்களால் மேற்சொன்ன விலாசத்தில் 22.01.2011ம் தேதி கட்டையால் தாக்கப்பட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மருத்துவர் நான் மருத்துவமனையில் இருந்து தகவல் சொல்லாமல் சென்றுவிட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் ஆமாம். அரசு மருத்துவமனையில் இருந்து வெளியில் சென்ற பின்பு வேறு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டேனா என்றால் இல்லை. அதன் பிறகு நான் சம்பவ நடந்த இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். என்னை அன்று இரவே போலிசார் அரசு மருத்துவமனையில் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை. நான் பார்த்ததாக சொல்லும் வாகனங்களை போலிசார் என்னிடம் காண்பித்து விசாரணை செய்யவில்லை. என் தம்பி பயன்படுத்தியதாக சொல்லும் அலைபேசியின் சிடிஆரை எடுட்தது போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்லும் தேதியில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், போலிசார் பதிவு செய்துள்ள வழக்கிற்கு ஏற்றாற்போல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்து சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் முதலிலேயே

வந்துவிட்டார்கள் என்றும், அதன் பிறகு என்னை வைத்து போலிசார் இந்த வழக்கை பதிவு செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் போலிசார் சொன்ன விதத்தில் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசாருக்கு பிடிக்காத நபர்கள் மீது அவர்கள் இந்த வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றும், அதனடிப்படையில் தான் 2 மற்றும் 4 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலிசார் வேண்டுமென்றே 2 மற்றும் 4 எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திற்கு அருகில் ஐஸ்வர்யா மருத்துவமனை, சேலம் மெடிக்கல் சென்டர் மற்றும் சேலம் முனிசிபல் கார்ப்பரேசன் பிரைமரி ஹெல்த் சென்டர் ஆகியவை உள்ளது என்று சொன்னால் சரிதான். என் மாமனார் தகவல் தெரிந்து சம்பவ இடம் வந்தார் நான் புலன் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லவில்லை. விபத்து பதிவேட்டு நகலில் லதா விலாசம் 23, கிழக்கு தெரு, ஜான்சன் பேட்டை என்று எழுதப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டு நகலில் நான் சொன்னதாக 22.01.2011 அன்று மேற்சொன்ன விலாசத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் நான் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். ஆனால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் உழவர் சந்தை அருகில் நடைபெறவில்லை என்றும், என்வீட்டிற்கு அருகில் தான் நடந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. அன்று உழவர் சந்தை திறந்திருந்து மக்கள் இருந்தார்கள் என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். உழவர் சந்தைக்கு எவ்வாறு சென்றார்கள் என்று நான் போலிசாரிடம் சொல்லவில்லை.

எனது தம்பி பவானியில் குடியிருந்தார். அவர் பவானியில் இருந்து எதற்காக சேலம் வந்தார் என்று போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் அவர் பொங்கல் பண்டிகைக்கு சாமி கும்பிட வந்தார். என் தம்பி பொங்கலுக்கு சாமி கும்பிட சேலம் வந்ததாக நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி பைக் மெக்கானிக்காக தொழில் செய்து வந்தார். என் தம்பி சேலத்தில் இருக்கும் போது யார் பைக் கடையை பார்த்துக் கொண்டார்கள் என்று எனது புலன் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். கடையை சாத்திவிட்டு தான் வந்தார்கள். எனது தம்பி கடையை சாத்திவிட்டு தான் சேலத்திற்கு வந்தார் என்ற விவரத்தை நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் என் தம்பி சேலத்திற்கு வந்தார் என்று நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சொன்னேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி பொங்கலுக்கு முன்னதாக ஊர் வந்தார் என்ற விவரத்தை நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் தம்பி பொங்கலுக்கு என் வீட்டிற்கு வந்தாரா அல்லது என் அம்மா வீட்டிற்கு வந்தாரா என்று நான் புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் நான் என் அம்மா வீட்டிற்கு வந்தார் என்று சொல்லியுள்ளேன். என் தம்பி என் அம்மா வீட்டிற்கு வந்த போது வைத்திருந்த போன் பற்றிய விவரங்களையும் அதன் எண்ணையும் புலன் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என் தம்பி போனில் இருந்த சிடிஆரை எடுத்து காட்டி புலன் விசாரணையின் போது என்னை குறுக்கு விசாரணை செய்யவில்லை. நான் வீட்டில் இருந்து சம்பவ இடத்திற்கு செல்ல சுமார் 3 அல்லது 4 நிமிடம் ஆனது. மேற்படி விவரத்தை நான் புலன்

விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வண்டியின் பின்புறம் ஓடினேன் என்று புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கழிப்பறை உழவர் சந்தைக்கு பின்புறம் தனியாக உள்ளது. நான் மருத்துவமனையில் உழவர் சந்தைக்கு பின்புறம் உள்ள கழிப்பறையில் சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்ட படி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>8 முதல் 10, 14 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

22ந் தேதி இரவு என் தம்பி இல்லாத போது சிலர் வந்து சென்ற விவரத்தை என் தம்பி வந்தவுடன் சொன்னேனா என்றால் இல்லை. என் தம்பி யாரிடம் பேசிக்கொண்டிருந்தார், எதிர்முனையில் என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சொல்லிதான் தெரியும். என் தம்பி போனில் பேசிவிட்டு, சிக்கந்தர் இப்படி கெட்ட வார்த்தையில் பேசுகிறார் என்று சொன்னார். அதன் பின்பு வெளியில் சென்றார். அவரை பின்தொடர்ந்து நானும் சென்றேன். சம்பவம் நடந்த அன்று சம்பவத்தை நான் பொது கழிப்பறையின் காம்பவுண்டிற்குள் இருந்து தான் பார்த்தேன். என் தம்பியை வந்தவர்கள் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். நான் விட்டு விடுங்கள் என்று கேட்டேன். மேற்படி விவரத்தை நான் புகார் வாக்குமூலத்திலும், புலன் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சம்பவ இடத்தில் சுமார் 5 அல்லது 6 நிமிடங்கள் இருந்தேன். கழிப்பறையில் இருந்து இரண்டு நபர்கள் என் தம்பி காலை பிடித்து வெளியே இழுத்து வந்தபோதும் நான் அங்கேயே தான் இருந்தேன். ரோட்டின்

மேற்குபுறம் தான் கழிப்பறை உள்ளது. என் தம்பியை இழுத்து வந்து போட்டபோது தலை மேற்கும், கால் கிழக்கும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. வடக்கு தெற்காக தான் இருந்தது. கார்கள் இரண்டும் கழிப்பறைக்கு நேரெதிரில் முன்பாக இருந்தது. அந்த காருக்கு அருகில் தான் என் தம்பி சென்ற இருசக்கர வாகனம் இருந்தது. நான் உடனடியாக காவல் நிலையத்திற்கு போய் போலிசார் யாரையும் அழைத்து வரவில்லை. சம்பவம் பற்றி நான் உடனடியாக எண்.100 க்கு நான் போன் செய்யவில்லை. சம்பவ சமயத்தில் என் கையில் அலைபேசி இருந்தது. சம்பவம் நடந்த உடன் முதலில் என் அம்மாவிற்கு தான் போன் செய்தேன். வேறு யாருக்கும் நான் போன் செய்யவில்லை. சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது தம்பியை காப்பாற்றும் முயற்சியையும் நான் செய்யவில்லை. முரளி, மணி, சந்துரு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் புளு கலர் காரில் வந்தார்கள். அவர்கள் நான்கு பேரையும் சம்பவத்திற்கு முன்பாகவே எனக்கு தெரியும். மேற்படி நான்கு பேரும் ஜான்சன் பேட்டையில் உள்ள நபர்களுடன் சேர்ந்து சுற்றிக்கொண்டிருப்பார்கள். அதனால் அவர்களை எனக்கு தெரியும். முரளி, மணி, சந்துரு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் அப்பா பெயர் மற்றும் விலாசம் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்திலும், புலன் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் முரளி, மணி, சந்துரு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் எனக்கு முன்பே தெரியும் என்ற விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். புகார் வாக்குமூலத்தில் முரளி, மணி, சந்துரு, ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அடையாளத்தை நான் சொல்லியுள்ளேன். முதலில் என் தம்பியின் முதுகில் வெட்டியவுடனேயே அவர் மயங்கி கீழே விழுந்துவிட்டார். அவர் மல்லாக்க தான் விழுந்தார். மற்ற காயங்கள் அனைத்தும் என் தம்பி கீழே விழுந்த பின்பு அவர் படுத்த நிலையில் இருந்த போது ஏற்படுத்தப்பட்டது.

சம்பவம் நடந்து 10 நிமிடத்தில் என் மாமனார் சம்பவ இடம் வந்தார். உடனே ஆட்டோவில் அரசு மருத்துவமனை சென்று விட்டேன். என் மாமனாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. என் மாமனாரிடம் என்ன தகவல் சொன்னார்கள் என்பதும் எனக்கு தெரியாது. நான் எனது தம்பியின் இறுதி சடங்கில் கலந்து கொண்டேன். மறுநாள் சுமார் 12.00 மணிக்கு என் தம்பியின் இறுதி சடங்கு நடந்தது. என் தம்பியின் பிரேதத்தை என் அம்மா மருத்துவமனையில் இருந்து வாங்கியிருக்கலாம், எனக்கு தெரியாது. நான் சிகிச்சை பெற்ற அதே மருத்துவமனையில் தான் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது என் அம்மா வந்து என்னை பார்க்கவில்லை. நான் பிரேத பரிசோதனை நடைப்பெற்ற இடத்திற்கு போய் பார்க்கவில்லை. என் தம்பியின் இருசக்கர வாகனம் பஜாஜ் காலிபர். அதன் பதிவு எண் எனக்கு தெரியாது. எனது தம்பி வீட்டில் இருந்து செல்லும் போது செல்போனை பாக்கெட்டில் தான் வைத்திருந்தார். என் தம்பியின் செல்போனை போலிசார் என்னிடம் காண்பிக்கவில்லை. விசாரணை முடிந்தும் செல்போனை என்னிடம் ஒப்படைக்கவில்லை. போலிசார் என் தம்பி பிரேதத்தின் மீது இருந்த பொருட்களை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. என் தம்பி மோதிரம் அணிந்திருந்தார், அது பட்டியலில் இல்லை. சம்பவம் நடைபெற்ற மறுநாள் பிரபல ரவுடி அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிக்கொல்லப்பட்டார் என்று செய்தி தாளில் செய்தி வெளியானது என்று சொன்னால் சரிதான். செய்தித்தாளில் என் தம்பியின் புகைப்படமும் வெளியிடப்பட்டிருந்தது என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. என் தம்பி கொலை செய்யப்பட்டபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் சம்பவத்தை

பார்த்திருந்தால் இறந்தவருக்கு முதுகில் காயம் ஏற்படாதது பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் உண்மை குற்றவாளிகள் யார் என்று கண்டறியாமல் என்னிடம் கலந்தாலோசித்து என் தம்பியின் எதிரிகள் யார் என்று கேட்டு நான், சாட்சி சித்தேஸ்வரன் மற்றும் போலிசார் ஆகியோர்கள் சேர்ந்து பொய்யான வழக்கு தயார் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் முரளி, மணி, பல்சர் சந்துரு, ராதாகிருஷ்ணனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.